*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 99/2021***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-4)***

*Name / Father's Name:* ***திருமதி.குண்டுமல்லி க/பெ. செல்லகருப்பையா***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.07.2026.**

துவக்க நேரம் 03.21 A.N

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆணையம்பட்டியில் குடியிருந்து, தம்மம்பட்டி அரசு மருத்துவமனையில் கிளர்க்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 28.04.2015 அன்று எங்கள் கிராமத்தை சேர்ந்த சரண்யா மற்றும் சத்தியராஜ் ஆகியோர்களது குடும்ப பிரச்சனை சம்மந்தமாக ஆத்தூர், அனைத்து மகளிர் காவல் நிலையத்திலிருந்து எங்கள் ஊருக்கு வந்த போலிசார், சம்பவயிடத்தை பார்த்து என் முன்பாக படம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், தேவி என்பவரும் கையெழுத்து போட்டோம்.

2) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கு சம்மந்தமாக பெரம்பலூர் போலிசார், என்னிடம் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, விசாரித்தார்கள். நான், எனது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தையும் பெரம்பலூர் போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன்.

2) போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் நான் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம். நான் கேள்விபட்டதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.28 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.07 18:15:38 +0530

Judicial Magistrate No.2, Attur.